07.12.2022
O.S.No.306/2014

வா.சா.1 திரு.விஜயபாண்டியன் த.பெ.முனிமாணிக்கம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

**1.** நான் பொறியியல் பட்ட படிப்பு படித்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு எல்லா விவரங்களும் நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 பொது அதிகார ஆவணம் 07.06.2013 அன்று எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை என்னுடைய முதல்வர் இந்த வழக்கின் வாதி கிரயம் பெற்ற பின்பு வா.சா.ஆ-1 எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன்பு எனது முதல்வர் அரசு வழக்கறிஞரிடம் சட்ட கருத்துரை பெற்றதாக அவரது பதில் உரையில் சொல்லி உள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எனது முதல்வர் சட்ட கருத்துரை பெற்றாரா என்பது எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல, நான் அந்த சட்ட கருத்துரை ஆவணத்தை பார்த்துள்ளேன். அந்த சட்ட கருத்துரை ஆவணத்தை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பழைய சர்வே எண்.239/1, ரீசர்வே எண்.240/3 மற்றும் தற்போதைய சர்வே எண்.62/3 என்றால் சரிதான்.

2. தாவா சொத்து எனது முதல்வர் கிரயம் பெறுவதற்கு முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது, எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரியல்ல, நான் எனது முதல்வருடன் கிரயம் பெறும் போது இருந்ததால் எனக்கு அந்த விவரம் தெரியும். எனது பிராதில் தாவாசொத்து சுந்தரசாமி கவுண்டருக்கு பாகபிரிவின் படி பாத்தியப்பட்டது என்றுதான் சொல்லி உள்ளோமே தவிர, எந்த அட்டவணை, எத்தனாவது இலக்க சொத்து என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். (பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)